DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C :213/2017** | |
| Prosecution Witness | | | : | **PW - 6** | |
| Name | : | திரு.குருமூர்த்தி | Occupation | : | டிரைவர் |
| Father's Name/ Husband | : | சாமிகண்ணு | | | |
| Village | : | வீராஞ்சேரி | Age | : | 44 |
| Taluk | : | பாபநாசம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 19th day of August 2025. 19-08-2025

(2 ஆம் எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் . எதிரி 1 ஆஜரில்லை. 1 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

நான் பாபநாசம் வீராஞ்சேரியில் வசிக்கிறேன். டிரைவராக வேலை பார்க்கிறேன். அ.சா.1 முருகானந்தம் எனக்கு அண்ணன் முறை. அ.சா.2, அ.சா.3 யை தெரியும். ஆஜர் எதிரி பொன்னுசாமி மற்றும் சரவணனை தெரியும். முருகானந்தத்தின் மகன் அருண்குமார் இறந்துவிட்டார் . அவரை சூலத்தில் குத்தியிருந்தார்கள். அன்று காலை related sureties அதை கேள்விபட்டு நான் போய் பார்த்தேன் . பொன்னுசாமியும், சரவணனும் இவ்வாறு செய்துவிட்டதாக கேள்விபட்டேன் . ஒரு பொண்ணு பிரச்சினை என்றும் பொன்னுசாமி தங்கச்சியை அருண்குமார் காதலித்ததாகவும் அந்த பிரச்சினையில் தான் இவ்வாறு செய்ததாக நான் கேள்விபட்டேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசார**ணை.

நான் டிரைவராக வேலை பார்க்கிறேன். அந்த பையன் இறந்து போனதற்கு முதல் நாள் தான் நான் வண்டி ஓட்டிட்டு போய் இரவு 7 மணிக்கு நான் வீட்டிற்கு வந்தேன். வந்தவுடன் நான் வீட்டில் போய் படுத்துவிட்டேன் என்றால் ஆமாம். காலையில் கேள்விபட்டு தான் கோயிலில் போய் பார்த்தேன் என்றால் ஆமாம். எதிரிகள் தான் செய்ததாக

யார் சொன்னார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது . காதல் பிரச்சினை என்பதையும் யார் சொன்னார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது . அந்த பையன் இறந்ததற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் , எந்தவித காதல் பிரச்சினையும் இல்லை என்றாலும் போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

<table>
<tr><td colspan="3">Case No</td><td>:</td><td colspan="3">S.C :213/2017</td></tr>
<tr><td colspan="3">Prosecution Witness</td><td>:</td><td colspan="3">PW - 7</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td>திரு.சதிஷ்குமார்</td><td rowspan="2" colspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">VAO உம்மளாப்பாடி</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td>கிருஷ்ணன்</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td>முருகன்கோயில் தெரு, தென்சருக்கை, கபிஸ்தலம்</td><td rowspan="2" colspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">39</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td>பாபநாசம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 19th day of August 2025. 19-08-2025

(2 ஆம் எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் . எதிரி 1 ஆஜரில்லை. 1 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

நான் தென்சருக்கை முருகன் கோயில் தெருவில் வசிக்கிறேன் . தற்போது உம்மளாப்பாடி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 2017 ஆம் வருடம் அலவந்திபுரத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். 18/01/2017 ஆம் தேதி மாலை 4 மணிக்கு பாபநாசம் வட்டாட்சியர் என்னை தொலை பேசியில் தொடர்புகொண்டு எனது கூடுதல் பொறுப்பு கிராமமான துரும்பூர் கிராமத்தில் வீராஞ்சேரியை சேர்ந்த சரவணன் என்பவர் நேற்று நடந்த கொலை சம்மந்தமாக தன் முன்பாக நேரில் ஆஜராகியுள்ளார் என்றும் , அதனால் உடனடியாக வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வருமாறு என்னை கேட்டுக் related sureties கொண்டதன் அடிப்படையில், நான் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்றேன் . வட்டாட்சியர் அலுவலக அறையில் திரு. சரவணன் என்பவர் இருந்தார். வட்டாட்சியர் அவர்கள் என்னிடம் சரவணன் என்பவர் கொலை சம்மந்தமாக தன்னிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் சொன்னதாக சொல்லி அதை என்னிடம் ஒப்படைத்தார். பாபநாசம் வட்டாட்சியர் இந்த விவரம் சம்மந்தமாக கபிஸ்தலம் காவல் ஆய்வாளருக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார் .

உடனடியாக கபிஸ்தலம் காவல் ஆய்வாளர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்தார் . வட்டாட்சியர் சரவணனை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தார் . இளஞ்செழியன் மற்றும் என் முன்னிலையில் சரவணனை வட்டாட்சியர் ஆய்வாளரிடம் ஒப்படைத்தார். சரவணன், நானு, இளஞ்செழியன், காவல் ஆய்வாளர் ஆகியோர் கபிஸ்தம் பாலக்கரையில் சுடுகாட்டின் ஓரமாக திரு சரவணன் கொலைக்கு சம்மந்தப்பட்ட இன்னொரு நபரான பொன்னுசாமி கதிரவன் என்பவரை அடையாளம் காட்டினார். காவல் ஆய்வாளர் அவரை கைது செய்து , காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார் . ஆய்வாளர் பொன்னுசாமி என்ற கதிரவனை காவல் நிலையத்தில் வைத்து எங்கள் முன்னிலையில் விசாரித்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார் . பொன்னுசாமி என்கின்ற கதிரவன் தன்னை அழைத்து சென்றால் ஆயுதங்களை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் இளஞ்செழியனும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான் . அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ– 4 ஆகும்.** வீராஞ்சேரி கிராமத்தில் கருப்புசாமி மதுரை வீரன் முன்பு 118.1/2 வளைந்த நிலையில் இருந்த ஒரு வேல். பொன்னுசாமி என்கின்ற கதிரவனுடைய ரத்தம் படிந்த ராமர் கலர் முழுக்கை சட்டை ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார் . அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ. 5 ஆகும்.** சரவணனும் காவல் நிலையத்தில் வைத்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் எங்கள் முன்னிலையில் கொடுத்தார் . அவர் கோவிலில் சம்பவம் நடந்தயிடத்திற்கு அழைத்து செல்வதாகவும் , ஆயுதங்களை எடுத்து ஒப்படைப்பதாகவும் கூறினார் . அதில் இளஞ்செழியனும் நானும் சாட்சியாக கையெழுத்து செய்தோம் . ஆய்வாளரும் கையெழுத்து செய்தார். சரவணனை முதலில் வட்டாட்சியர் அலுவலகத்திலும் அதன் பின்னர் காவல் நிலையத்தில் வைத்தும்

விசாரணை செய்தார்கள். சரவணன் வட்டாட்சியரிடம் ஒரு வாக்குமூலம் கொடுத்துவிட்டு, பின்னர் காவல் நிலையத்தில் ஆய்வாளர் விசாரித்த போது ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் . அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சரவணன் கையெழுத்து மற்றும் நானும் , இளஞ்செழியனும் சாட்சியாக கையெழுத்து செய்திருக்கிறோம் . ஆய்வாளரும் கையெழுத்து செய்திருக்கிறார் . அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ. 6 ஆகும்.** வீராஞ்சேரியில் ஒரு வயல் அருகே சரவணன் அடையாளம் காட்டி எடுத்துக்கொடுத்த பொடி கட்டம் போட்ட வெள்ளை அரைக்கை சட்டை மகஜரில் கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும், இளஞ்செழியனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ– 7 ஆகும்.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**முதல் எதிரி தரப்பு குறுக்கு விசார**ணை.

என்னுடைய அன்றாட பணிகளை பராமரிக்க பாக்கெட் டைரி உள்ளது என்றால் சரியல்ல . எங்களுடைய அன்றாட பணிகளை பராமரிக்க பாக்கெட் டைரி உள்ளது என்றாலும் அதை நான் மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை விசாரித்த போது நான் தென்சருக்கை கிராமத்தில் தான் குடியிருந்தேன் . நான் அப்போது அலவந்திபுரம் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்து கூடுதல் பொறுப்பாக துரும்பூர் கிராமத்தையும் பார்த்தேன். கிராம நிர்வாக அலுவலருக்கு அவருடைய அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் தான் வசிக்கவேண்டும் என்று ஒரு விதி உள்ளது என்றால் ஆமாம் . வட்டாட்சியர் என்னை மாலை 4 மணிக்கு தொலை பேசியில் அழைத்தார். வட்டாட்சியர் என்னை தொலை பேசியில் அழைத்த விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொன்னேன். வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆய்வாளரிடம் சரவணனை ஒப்படைத்து, சரவணனை ஆய்வாளர் கைது செய்த போது அங்கு நான் வட்டாட்சியர் இளஞ்செழியன் ஆய்வாளரை

வேறு பொது மக்கள் யாரும் அங்கு இல்லை . வட்டாட்சியர் அலுவலகம் என்பது பொது மக்கள் நிறைய பேர் வந்து போகும் என்ற நிலையில் , அங்கு பொது மக்கள் யாரும் இல்லை என்று நான் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . போலிசார் என்னை 1/2 மணி நேரம் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் . நான் கையெழுத்து போட்ட ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரை யார் தயாரித்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர் மடிக்கணினியை வைத்து தயார் செய்தார் . நான் சொன்னவாறு அந்த ஆவணம் காவல் ஆய்வாளரால் சொன்ன நேரத்தில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. என் முன்னிலையில் காவல் ஆய்வாளர் யாரையும் கைது செய்யவில்லை, எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல . வழக்கின் குற்ற எண் எனக்கு தெரியாது . நான் சொன்ன விதத்தில் சொன்னவாறு இந்த ஆவணங்கள் தயார்செய்திருந்தால் எனக்கு வழக்கின் குற்ற எண் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல . நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில் இடத்தில் எந்தவித தடயப்பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல . போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**இரண்டாம் எதிரி தரப்பு குறுக்கு விசார**ணை

நான் தாசில்தார் அலுவலகத்தில் 4 முதல் 4.30 மணி வரை இருந்தேன். தாசில்தார் அலுவலகத்திற்கும் இரண்டாம் எதிரி பொன்னுசாமி கைது செய்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் 4 கிமீ தூரம் இருக்கும். பொன்னுசாமியை கைது செய்ததாக சொல்லப்படும் இடத்திற்கு நான் , கபிஸ்தலம் காவல் ஆய்வாளர் , சரவணன், இளஞ்செழியன் ஆகியோர் போனோம் . அப்பொழுது 5 மணி இருக்கும் . எதிரி எனக்கு அதற்கு முன்பு பழக்கும் கிடையாது , பார்த்தது கிடையாது. முதன்முதலாக கபிஸ்தலம் பாலக்கரை சுடுகாடு அருகே கைது செய்த

போது தான் பார்த்தேன் . அதன்பிறகு காவல் நிலையத்தில் பார்த்தேன் . அதன்பிறகு இன்று நீதிமன்றத்தில் தான் பார்க்கிறேன் . பொன்னுசாமி ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தான் வாங்கினார்கள் . வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எழுதினார்களா என்றால் விசாரித்தார்கள் . அதில் படித்து பார்த்து கையெழுத்து போட்டு கொடுத்தேன் . மகஜரை எழுதியது (அ.சா.ஆ–3) காவல் ஆய்வாளர். அ.சா.ஆ–3 இல் யாரிடமிருந்து கைப்பற்றியது என்ற காலத்தில் சாட்சிகள் முன்னிலையில் என்று தான் உள்ளது . யாரிடம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரி . வேல் கம்பு அருகில் என்பது அடிக்கப்பட்டு, இரும்பு வேல் அடியில் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இதை திருத்தி எழுதியது யார் என்று தெரியாது . கைப்பற்றிய இடத்தில் வேலை அளந்து பார்த்தார்கள் . அ.சா.ஆ.5 18/01/2017 என்பதில், 2017 என்ற வார்த்தை 2013 ஆக எழுதப்பட்டு, திருத்தப்பட்டுள்ளது என்றால் ஆமாம். காலம் 7 இல் 1வது எதிரி என்பது இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . காது உள்ளது என்பது இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . இது எப்பொழுது திருத்தப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது . சட்டை கோவில் பக்கத்திலேயே இருந்து எடுத்தார்கள் . மறைத்து வைக்கப்பட்டிருந்தது. எதை வைத்து மறைத்திருந்தார்கள் என்று தெரியவில்லை. அ.சா.ஆ.5 மகஜரில், நான், இளஞ்செழியன், காவல் ஆய்வாளர் கையெழுத்து போட்டோம். எங்கள் மூன்று பேரை தவிர வேறு யாரும் கையெழுத்து போடவில்லை . நாங்கள் போட்ட போதே காவல் ஆய்வாளரும் கையெழுத்து போட்டார். காவல் ஆய்வாளர் என்ற இடத்தில் அவருடைய கையெழுத்து இல்லை என்றால் சரி . எங்களிடம் கையெழுத்து வாங்கியதில் ஆய்வாளரின் கையெழுத்து இருந்தது என்றால் ஞாபகமில்லை . ஆனால் அ.சா.ஆ. 5 இல் உள்ளது என் கையெழுத்து தான். நான் இந்த கையெழுத்தை கைப்பற்றிய இடத்தில்

வைத்து போட்டேன். பொன்னுசாமி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலமும் மடிக்கணினியில் டைப் செய்யப்பட்டது தான் . மடிக்கணினிக்கு கரண்ட் காவல் நிலையத்தில் இருந்து எடுத்தார்கள். காவல் நிலையத்தில் வைத்து தான் டைப் செய்தார்கள். டைப் செய்த இடத்தில் தான் நான் கையெழுத்து போட்டேன். இரண்டாவது எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும் அவர் எங்கள் முன்னிலையில் எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை . அவரிடமிருந்து எந்த சான்று பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி இருப்பவர் பொன்னுசாமி என்கின்ற கதிரவன். சரவணனை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலிசார் சொல்லிக்கொடுத்து தான் எதிரியை அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.